முழுப்பதிப்புரிமையுடையது
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்
**Provincial Department of Education. Northern Province**

42 | T | I,II

கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் (உயர் தரம்) முன்னோடிப் பரீட்சை - 2021
**General Certificate of Education (Advance. Level) Pilot Exam - 2021**

கர்நாடக சங்கீதம் I, II
**Carnatic Music I, II**

மூன்று மணித்தியாலம்
**Three Hours**

# பகுதி I

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக

1. கீர்த்தனை ஒன்றைப் பாடும் போது பொருத்தமான இடத்தில் அதன் இராகத்தில் அமைந்த ஸ்வரங்களை மனோதர்மமாகப் பாடுவது
   1. சிட்டைஸ்வரம் 2. நிரவல் 3. முக்தாயிஸ்வரம்
   4. கற்பனாஸ்வரம் 5. தானம்

2. நாட்டிய நிகழ்வில் 7 ஆவது இடத்தை வகிப்பதும் இசைக் கச்சேரிகளில் இறுதியில் இடம்பெறுவதுமான உருப்படி
   1. பதவர்ணம் 2. இராகமாலிகை 3. பதம்
   4. தில்லானா 5. கீர்த்தனை

3. சங்கீர்ணஜாதி மட்டியதாளம் மிஸ்ரகதிபேதம் அடைவதினால் தோன்றும் மொத்த எண்ணிக்கை
   1. 100 2. 108 3. 120 4. 140 5. 180

4. சென்னையில் தங்கக் கோபுரத்தைப் பெற்ற ஈழத்து தவில் வித்துவான்
   1. தவில் சின்னையாபிள்ளை 2. தவில் தட்சணாமூர்த்தி
   3. ஆறுமுகம்பிள்ளை 4. இராஜரத்தினம் பிள்ளை
   5. என்.சண்முகரத்தினம்

5. வசந்தா இராகத்தின் தாய் இராகம்
   1. 17 ஆவது மேளகர்த்தா 2. 21 ஆவது மேளகர்த்தா
   3. 15 ஆவது மேளகர்த்தா 4. 08 ஆவது மேளகர்த்தா
   5. 14 ஆவது மேளகர்த்தா

6. 23 பண்களிலும் தேவாரங்கள் அருளிச் சிறப்பு பெறுபவர்
   1. சுந்தரமூர்த்திநாயனார் 2. திருநாவுக்கரசு நாயனார்
   3. மாணிக்கவாசகர் 4. காரைக்கால் அம்மையார்
   5. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

7. கனபஞ்சக இராகங்கள் எனப்படுபவை
   1. பிலஹரி, ஆரபி, காம்போதி, வராளி, நாட்டை
   2. நாட்டை, ஆரபி, மோகனம், வராளி, கௌளை
   3. நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம்
   4. நாட்டை, கௌளை, பிலஹரி, ஸ்ரீராகம், வராளி
   5. ஆரபி, மோகனம், நாட்டை, காம்போதி, கௌளை

8. ஒரு பாடலில் ஒரு சொல் ஒன்றிற்கு மேற்பட்ட பொருளுடன் பயன்படுத்தப்பட்டால் அவ்வணி
   1. மணிப்பிரவாளம் 2. யமகம் 3. ஸ்வராட்சரம்
   4. பொருளணி 5. சொல்லணி

9. தேவாலயங்களில் வாசிக்கப்படும் வாத்தியம்
   1. பஞ்சமுக வாத்தியம் 2. தமுக்கு 3. முரசு
   4. தோதார் 5. துந்தினா

10. ‘‘கவிகாளமேகம்’’ என்னும் திரைப்படத்தில் நடித்த கலைஞர்
   1. A.K.C நடராஜன் 2. M.P பாலகிருஷ்ணன் 3. ஷேக் சின்ன மௌலானா 4. N.K பத்மநாதன்
   5. திருவாடுதுறை இராஜரத்தினம் பிள்ளை

11. பின்வருவனவற்றுள் ஸ்திர வாத்தியம்
   1. சங்கு 2. பியானோ 3. தபேலா 4. மோர்சிங்
   5. வீணை

12. ‘‘தஞ்சம் என்றாலே’’ என்னும் தானவர்ணம் அமைந்துள்ள இராகம், தாளம் விபரம்
   1. ஆபோகி, ஆதி தாளம் 2. ஆபோகி, அட தாளம்
   3.ஸாவேரி, ஆதி தாளம் 4. ஷண்முகப்பிரியா, ஆதி தாளம்
   5. ஹம்சத்வனி, ஆதிதாளம்

13. சுத்தாங்கமாகப் பாடப்படும் பாடல்
   1. திருவாசகம் 2. வர்ணம் 3. கீதம் 4. பதம் 5. தேவாரம்

14. பதநி – மபதநி – கமபதநி – ரிகமபதநி – கமபதநி – மபதநி – பதநி
   மேலே தரப்பட்ட ஜதி
   1. டமருஜதி 2. மிருதங்க ஜதி 3. கோடிச்சயதி 4. ஸ்ரோதோவஹயதி
   5. விசமயதி

15. ஹிந்துஸ்தானி இசையில் 16 மாத்திரைகளைக் கொண்ட தாளம்

1. தாதரா  2. ஜப்தால்  3. தீப்சந்தி  4. திரிதால்  5. சௌதால்

16. கதக் நடனத்திற்கும் பக்க வாத்தியமாக வாசிக்கப்படும் நரம்புக் கருவி

1. வயலின்  2. ஸரோட்  3. ஸிதார்  4. தம்புரா  5. ஸாரங்கி

17. 20 ஆவது மேளகர்த்தாவின் ஜன்யமான இராகங்கள்

1. வசந்தா, ஸாவேரி  2. ஆனந்த பைரவி, பைரவி  3. ஸாவேரி, பைரவி
4. ஹிந்துஸ்தான் காபி, ஆனந்தபைரவி  5. ஆபோகி, சுத்தசாவேரி

18. ஒரு இராகத்தில் பல தடவைகள் உச்சரிக்கப்படும் ஸ்வரம்

1. வின்னியாசம்  2. மந்தரம்  3. அம்சம்
4. பகுத்துவம்  5. சன்னியாசம்

19. பைடால குருமூர்த்தி சாஸ்திரங்களின் முத்திரை

1. பைடாலு  2. குருமூர்த்தே  3. வேங்கட
4. பைடாலகுரு  5. பத்மநாம

20. "நெரநம்மி" என்னும் அடதாள வர்ணம் அமைந்துள்ள இராகத்தின் தாய் இராகம்

1. சங்கராபரணம்  2. கல்யாணி  3. ஹரிகாம்போதி
4. பந்துவராளி  5. ஹரஹரப்பிரியா

21. பத்து வயதிலேயே புல்லாங்குழல் வாசிப்பதில் சிறந்து விளங்கியவர் யார்?

1. பாக்  2. பாத்கண்டே  3. தான்சேன்
4. அமீர் குஸ்ரூ  5. பீதோவன்

22. பாண சக்கரத்தில் இரண்டாவது இராகம்

1. யாகப்பிரியா  2. நடைபைரவி  3. சாருகேசி
4. நாகானந்தினி  5. சூலினி




23. ஸரிமபநிஸ் - ஸ்நிதநிபமகாரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தை கொண்ட இராகம்

1. ஹிந்துஸ்தான் காபி  2. பைரவி  3. ஸாவேரி
4. ஆனந்த பைரவி  5. ஹமீர் கல்யாணி

24. விஷ்ணுவின் பத்து அவதாரம் பற்றி கூறும் 10 இராகங்களை கொண்ட இராகமாலிகையை இயற்றியவர்

1. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள்
2. ஸ்வாதித் திருநாள் மகாராஜா
3. அருணகிரிநாதர்
4. ஷேத் ரக்ஞர்
5. பாக்

25. குருத்ருத விராமம் காட்டப் பயன்படும் குறியீடு

1. 
2. 
3. 
4. 
5. 

26. பொன்னும் மெய்ப் பொருளும் தேவாரத்தின் பண் யாது?

1. தக்கேசி 2. நட்டபாடை 3. சீகாமரம் 4. கொல்லி 5. யாழ்முரி

27. ஜெயதேவரால் இயற்றப்பட்ட உருப்படி

1. திருப்புகழ் 2. ஜாவளி 3. தில்லானா 4. தரு 5. அஷ்டபதி

28. ஸ்நி – நித – தப – பம போன்ற ஸ்வர கோர்வைகளை அசைத்து பாடுவதன் மூலம் கிடைக்கப் பெறும் கமகம்

1. டாலு
2. ஸ்புரிதம்
3. பிரத்தியாகதம்
4. ஆந்தோளிதம்
5. ஆஹதம்

29. மிஸ்ரஜாதி மட்டிய தாளத்தின் அங்கங்கள் எவை?

1. $l_7$ O $l_7$ 2. O $l_3$ 3. $l_7$ U O 4. $l_7$ O $l_{7\ 7}$ 5. $l_7$ $l_7$ O O

30. செந்துருத்தி பண்ணில் தேவாரத்தை இயற்றிய நாயனார்

1. மாணிக்கவாசகர்
2. சுந்தரமூர்த்திநாயனார்
3. திருநாவுக்கரசர்
4. காரைக்காலம்மையார்
5. அருணகிரிநாதர்

31. "சங்கீத வித்துவமணி" என்ற பட்டத்தை பெற்ற இலங்கை கலைஞர் யார்

1. வி.தட்சணாமூர்த்தி
2. எஸ்.என்.உருத்திராபதி
3. ஜெயதேவர்
4. வேங்கடமகி
5. P. சாம்பமூர்த்தி

32. 7 ½ ஸ்தாயிகளை வாசிக்கக் கூடிய வாத்தியம்

1. கிற்றார்
2. ஸாரங்கி
3. பியானோ
4. தபேலா
5. கோட்டு வாத்தியம்

33. சுத்த தைவதம் என்பதற்குரிய மேலத்தேய இசை பெயர்

1. A flat 2. G 3. B flat 4. C 5. F

34. சுத்தமத்யமத்தை அன்னியஸ்வரமாக கொண்ட இராகம்

1. கமாஸ் 2. பிலஹரி 3. சாரங்கா 4. அடாணா 5. மூகாரி

35. சிட்டைஸ்வரத்திற்கு ஸாகித்தியம் அமைக்கப்பட்டிருக்கும் அணி

1. சொற்கட்டுஸ்வரம் 2. ஸ்வரஸாஹித்தியம் 3. சங்கதி
4. யமகம் 5. மத்யமகால ஸாகித்தயம்

36. "ராதா வதன" என்ற அஷ்டபதி அமைந்துள்ள இராகம்?

1. மோகனம் 2. மத்யமாவதி 3. கரஹரப்பிரியா
4. கமாஸ் 5. நாட்டைக்குறிஞ்சி

37. கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் மேலைத்தேய வாத்தியங்கள்

1. தபேலா, கிளரினெட் 2. கெஞ்சிரா, மெண்டலின் 3. சக்ஸபோன், மெண்டலின்
4. முகர்சிங், கிளரிநெட் 5. கடம், சக்ஸபோன்

38. ஐரோப்பிய சங்கீதத்தில் பெண்களுக்குரிய மூவகைக் குரல் வகைகளில் நடுத்தரமான குரலினைக் குறிப்பது

1. ஸொப்ரானோ (Soprano) 2. பரிடோன் (Baritone) 3. ஆல்டோ (Aldo)
4. கொண்ராக்டோ (Contracto) 5. மெஸோ ஸொப்ரோனோ (Mezzosoprana)

39. பின்வருவனவற்றுள் தாது – மாது சம்பந்தமான அணி?

1. மணிப்பிரவாளம் 2. ஸங்கதி 3. யமகம்
4. ஸ்வராட்ஷரம் 5. சிட்மைஸ்வரம்

40. புலுத விராமம் எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சரகால எண்ணிக்கை?

1. 10 2. 12 3. 13 4. 14 5. 16

41. சங்கீதரத்னாகரத்தில் குறிப்பிடப்படும் கமகங்களின் எண்ணிக்கை

1. 10 2. 15 3. 19 4. 20 5. 22

42. "வெண்கலக்குரல்" என விமர்சித்துப் பாராட்டப்பட்டவர் யார்?

1. என்.சண்முகரத்தினம் 2. வி.தட்சணாமூர்த்தி
3. ம.த.ந.வீரமணி ஐயர் 4. P. சாம்பமூர்த்தி
5. அமீர் குஸ்ரு

43. “முவ்வகோபால” எனும் முத்திரையை கொண்டவர் யார்?

1. வேங்கடமகி 2. ஷேத்ரக்ஞர் 3. ஜெயதேவர்
4. அருணகிரிநாதர் 5. பைடாலகுருமூர்த்தி சாஸ்திரிகள்

44. ஹிந்துஸ்தானி இசையில் “தும்ரி” எனப்படும் உருப்படி

1. தில்லானா 2. ஜாவளி 3. அஷ்டபதி
4. திருப்புகழ் 5. பதம்

45. “ஹார்மனிக் மைனர் ஸ்கேல்” என அழைக்கப்படும் இராகம்

1. ஹமீர் ஹல்யாணி 2. ஆபோஹி 3. வசந்தா
4. கீரவாணி 5. ஷண்முகப்பிரியா

46. குயிற் பத்து எனும் திருவாசக வகையில் அடங்குவது

1. ஆதியும் அந்தமுமில்லா 2. கீதமினிய குயிலே
3. வானாகி மண்ணாகி 4. சார் இளங்கிளியே
5. அட்டமூர்த்தி அழகன்

47. “இன்னம் என் மனம்” வர்ணத்தினை இயற்றியவர்?

1. லால்குடி ஜெயராமன் 2. பாபநாசம் சிவன்
3. முத்துஸ்வாமி தீட்சிதர் 4. என்.வீரமணி ஐயர்
5. பட்டணம் சுப்ரமணியஐயர்

48. ஜாவளியை ஒத்த ஹிந்துஸ்தானி உருப்படி?

1. தரானா 2. கஜல் 3. லீட 4. பஜன் 5. தப்பா

49. ஷாடவ – ஔடவ இராகம்

1. பிலஹரி 2. நாட்டைக் குறிஞ்சி 3. ஸாரமதி
4. ஆரபி 5. மலஹரி

50. ஸாவேரி இராகத்தின் தாய் இராகத்தின் மேள எண்?

1. 15 2. 65 3. 20 4. 17 5. 56